**2026 ஜூன் மாதம் 18– ஆம் தேதி வியாழக்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 124/2024**

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18– ஆம் தேதி வியாழக்கிழமை

திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW11 (LW17) – Dr.ராஜீவ்குமார் |
| தகப்பனார் பெயர்: | பிச்சைமணி |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | மருத்துவர் |
| வயது : | 40 |

18.06.2026

(1, 3 எதிரிகள் ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். முருகேசன் (வயது 46) என்பவர் போடிநாயக்கனூர் அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை பெற்றுக்கொண்டு, மேல்சிகிச்சைக்காக கடந்த 16.10.2023ம் தேதியன்று நான் பணியிலிருந்த போது, வலது தோள்பட்டை மற்றும் வலது கையில் அடிபட்டு வந்தார். அவரை உள்நோயாளியாக அனுமதித்து, பரிசோதனை செய்து, சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை கொடுங்காயம் என்று சான்றளித்தேன்.

அது **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அரிவாளால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புள்ளது. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 அரிவாளால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது சா.பொ.1 அரிவாளை காண்பித்து விசாரித்தாரா என்றால் இல்லை. மேல்சிகிச்சைக்கு வந்தபோது, காயத்தை ஏற்படுத்தியவர் பெயரை காயம்பட்ட நபர் குறிப்பிட்டு சொன்னாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்த இடம் பர்னிச்சர் கடை என்பதால் அங்குள்ள பீரோ, மரக்கட்டைகள் போன்ற கூர்மையான பகுதிகளில் வேகமாக மோதினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.06.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.18 18:04:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.06.2026